**O.S**.248/2012

**சாந்தி DW**3

**நாள் :** 12.02.2020

**சாட்சி இன்று ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறார்.**

**7 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ..**

தாவா சொத்து விவசாய பூமி. தாவா சொத்தில் 4 ல் ஒரு பகுதியை என் கணவர் லோகநாதன் ஒரு சுப்பிரமணியம் என்பவருக்கு கிரையம் எழுதிக் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அதே சொத்தை சுப்பிரமணியத்திடம் இருந்து 16.09.2008 ம் தேதி நான் கிரையம் வாங்கியிருக்கிறேன். அந்த சொத்தைத்தான் 11.04.2012 ம் தேதி நான் வாதி தங்கமுத்துவிற்கு கிரையம் செய்து கொடுத்திருக்கிறேன் என்றால் ஆமாம். இந்த நடவடிக்கைகள் அனைத்துமே 7 ம் பிரதிவாதி குப்புசாமியை ஏமாற்றும் நோக்கத்தோடு செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எனது கணவர் லோகநாதன் 27.02.2012 ம் தேதி 7 ம் பிரதிவாதி குப்புசாமிக்கு ஒரு விற்கிரையம் செய்து கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அந்த கிரையத்தின் அடிப்படையில்தான் 7 ம் பிரதிவாதி குப்புசாமி அந்த சொத்தில் சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. 16.09.2009 ம் தேதி என் கணவர் என் பெயருக்கு எழுதிக் கொடுத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணம் போலியானது என்றால் சரியல்ல. அது உண்மையான ஆவணம். அதனால்தான் அவர் 10.11.2011 ம் தேதி அதை இரத்து செய்துவிட்டார் என்றால் அவர் இரத்து செய்த ஆவணம் செல்லத்தக்கது அல்ல. தாவா சொத்தில் நான் இதுவரை அனுபவம் செய்யவே இல்லை என்றால் சரியல்ல. எனவேதான் பிரமாண வாக்குமூலத்தில் 4 ல் 2 பாகத்தில் நான் சுவாதீனத்தில் இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. தங்கமுத்துதான் ஓட்டி வருகிறார் நானும் வேலைக்கு போவதால் அவ்வப்போது பூமியைப் போய் பார்த்து வருவேன். தாவா சொத்தைப் பொறுத்தவரை 4 ல் 2 பாகத்தை நான் முதல் நிலை தீர்ப்பாணை கோர எனக்கு தகுதியில்லை என்றால் சரியல்ல. நான் வாதி மற்றும் மற்ற பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து 7 ம் பிரதிவாதியை ஏமாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ..**

என்னுடைய முதல் விசாரணை சங்கதிகள் பற்றி 3 ம் பிரதிவாதிக்கு எதுவும் தெரியாது என்றும், அதன் நடவடிக்கைகள் எதுவும் 3 ம் பிரதிவாயை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி என் கணவருக்கு பெயரளவில் கொடுத்த விடுதலைப் பத்திரமும் அதன் அடிப்படையில் என் பெயருக்கு ஏற்பட்ட தான பத்திரமும் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லை

என்றும், பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை ..**

வாதிக்கு 11.04.2012 ம் தேதியில் தாவா சொத்தில் 4 ல் 1 பங்கை நான் கிரையம் கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த சொத்து ஒரு கோவில்பாளையம் சுப்பிரமணியத்திடம் இருந்து கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். 20.07.2009 ம் தேதி 4 ம் பிரதிவாதியான என் கணவரின் தங்கை விஜயலட்சுமி இருந்து வாதி 4 ல் 1 பாகம் கிரையம் வாங்கியிருக்கிறார். அதைப் பொறுத்து எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. 20.07.2009 ம் தேதி 1 ம் பிரதிவாதியான என் மாமனார் வாதிக்கு 4 ல் 1 பங்கை கிரையம் செய்து கொடுத்திருக்கிறார் என்றால் அது செல்லாது. 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்து கூட்டு குடும்பச் சொத்துதான். 1 ம் பிரதிவாதி பெரியசாமி மற்ற பிரதிவாதிகளின் தகப்பனார். அவருக்கு 4 ல் 1 பாகம் இருந்தது. அந்த பாகத்தைத்தான் தங்கமுத்து வாங்கி அனுபவித்து வருகிறார் என்றால் அது செல்லாது. 4 ல் 3 பாகம் வாதி கிரைய வகையில் வாங்கி தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் 4 ல் 2 பாகம் எனக்கு கிடைக்கத்தக்கது என்று வழக்கிற்காக பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல.